1971 டிசம்பர் 13]

மாண்புமிகு திரு இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, அதைப்பற்றிய விவரங்களைத் தொல்பொருள் ஆய்வுத் துறையினர் ஆராய்ந்து கொண்டிருக்கிறார்கள். அந்தக் கோயிலைப்பற்றிய குறிப்புகள் தெரிகின்றன. அந்தக் கோயில் விசயாலய சோழச் சுரம் என்று கோயிலுக்குப் பெயரிடப்பட்டிருக்கிறது. தஞ்சையில் சோழப் பேரரசை நிறுவியவன் விசயாலய சோழன். அந்த அரசனின் காலத்திலோ அல்லது அவன் கீழ்ப்பட்ட சிற்றரசன் ஒருவனாலோ கட்டப்பட்டிருக்கலாம் என்று கருதப்படுகிறது. இந்தக் கல்வெட்டைப்பற்றித் தொல்பொருள் ஆய்வுத் துறையினர் ஆராய்கிறார்கள், பிறகு வெளியிடப்படும்.

Tamil in Indore University

* 303 Q.—THIRU K. T. K. THANGAMANI : Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state—

(a) whether the Government has received any communication from Indore University regarding introduction of Tamil in that University; and

(b) if so, the details thereof?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : (அ) இல்லை.

(இ) இக் கேள்விக்கு இடமில்லை.

திரு. கே. டி. கே. தங்கமணி : சார், இந்தூர் பல்கலைக் கழகத்தில் தமிழ் சொல்லிக்கொடுக்க வேண்டுமென்பதற்காக 3 ஆண்டுகளுக்கு முன்பு ஒரு தமிழாசிரியரைத் தமிழ்நாட்டிலிருந்து கொடுக்க வேண்டுமென்றும், அதற்காக பாதி அளவாவது தாங்கள் சம்பளம் கொடுப்பதாகவும், மற்ற பாதியை தமிழக அரசு கொடுக்க வேண்டுமென்றும். பின்னால் தாங்களே ஏற்றுக்கொள்வது என்றும் சொல்லி ஏதாவது கடிதம் வந்திருக்கிறதா ?

மாண்புமிகு திரு இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, இந்தூர் பல்கலைக் கழகத்திலிருந்து இப்படிப்பட்ட குறிப்பு எதுவும் அரசாங்கத்திற்கு வந்ததாகத் தெரியவில்லை. வேறு பல்கலைக்கழகங்களைப் பொறுத்தவரையில், பஞ்சாப் பல்கலைக் கழகம் தமிழ்ப் பிரிவிற்காக 3 லட்சம் ரூபாய் ஒதுக்கி தமிழ் சொல்லிக்கொடுக்க வழிவகை செய்யப்பட்டிருப்பதாக பஞ்சாப் அரசு தமிழக அரசுக்கு அறிவித்திருக்கிறது. 16—7--1969 அன்று உஸ்மானியா பல்கலைக் கழகத்திற்கு தமிழ் பாடத்திற்காக ஆண்டு ஒன்றுக்கு 25,000 ரூபாய் வீதம் 5 ஆண்டுக் காலத்திற்கு இந்த அரசு வழங்க ஒப்புதல் அளித்திருக்கிறது. 27--10—1969 அன்று ஸ்ரீ வெங்கடேஸ்வரா பல்கலைக் கழகத்திற்கு தமிழ்ப் பாடத்திற்காக ரூ. 10,000 ஆண்டு ஒன்றுக்கு வீதம் 5 ஆண்டுகளுக்கு இந்த அரசு வழங்க ஒப்புதல் அளித்திருக்கிறது. 1—4—1970-ல் ஆக்ரா பல்கலைக் கழகத்திற்கு 1970-71-ல் தமிழ்ப் பண்பாட்டு வளர்ச்சிக்காக ரூபாய் 1,532 வழங்கப்பட்டிருக்கிறது.